மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 'இம்ப்ரூவ் மெண்ட்ஸ் டு டாங்க்ஸ்' என்ற வகையில் ரூ. 2,50,000 ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதில் இவையெல்லாம் வரும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்தத் திட்டம் 63-லேயே அமைக்கப்பட்டும், இப்பொழுதுதான் டெண்டர் அழைத்து இருக்கிறார்கள். இராமநாதபுரம் பின்தங்கிய மாவட்டம் என்பதால் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று இருந் தாலும், எட்டு வருஷக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இனிமேலாவது துரிமாக வேலைகளைச் செய்து, அந்த பின்தங்கிய மக்களுக்கு வாழ்வளிக்க அரசாங்கம் முடிவெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இராமநாதபுரம் முன்னேற்றத்தில் உறுப்பினர் அக்கறை காட்டுவது பாராட்டத் தக்கது. காலதாமதத்திற்கு நாங்கள் அல்ல. ஏற்கனவே இருந்தவர்கள்தான் பொறுப்பாளிகள். நம்முடைய அரசு வந்தபிறகு துரிதமாக வேலைகள் எடுக்கப்பட்டு முடியும் தருவாயில் இருக்கிறது.

Air Port near Tuticorin

* 207 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to press the Union Government to locate an Air-Port near Tuticorin in Tirunelveli district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) திருநெல்வேலி மாவட்டத்தில் விமானத் தளம் ஒன்றை அமைப்ப தற்கான அவசியத்தை இவ்வரசு முன்னரே மத்திய அரசிடம் வலியுறுத்தியுள்ளது. மேலும், தூத்துக்குடிக்கு விமானப்போக்கு வரத்துக்கான குறைந்த அளவு போக்குவரத்து வாய்ப்புக்கு இவ்வரசு உத்தரவாதமும் அளித்துள்ளது. ஆனால், திட்டத்தின்கீழ் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையினால் இத்திட்டத்தை இன்னும் சிறிது காலம்வரை எடுத்துக் கொள்வதற்கில்லையென மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஆயினும், இத்திட்டத்தை பரிசீலிப்பதற்குத் தேவையான ஆய்வுகள் (Survey) மத்திய உள்நாட்டு விமானத்துறை இயக்குநராலும், இந்திய வான்வழி நிறுவனத் தாலும் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் முடிவான பதில் எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே. கன்னியாகுமரியில் ஒரு ஏர் போர்ட் அமைக்க மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

1971 டிசம்பர் 9]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இப்பொழுது இல்லை. வற்புறுத்திய திட்டம் இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருநெல்வேலி, தூத்துக்குடி பற்றி இருக்கவேண்டும் துணைக் கேள்விகள்.

திரு. எம். தேவராசன் : ஒரு இடத்தில் விமானத்தளம் அமைக்க தேவைகள் என்னென்ன? உதகையில் அப்படிப்பட்ட தேவைகள் இருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தேவைகளைப் பற்றி எனக்குத் தெரியாது. ஊட்டிபற்றிய பிரச்சினை இப்பொழுது இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, யுத்த காலங்களில் வட நாட்டு விமானத் தளங்களுக்கு பாதுகாப்பு இல்லை. ஆகவே, தென்னகத்துக்குத் தளங்களைப் பயன்படுத்துகிறார்கள். தூத்துக்குடி விமான தளத்திற்கு இப்பொழுது மத்திய சர்க்கார் தயக்கம் தெரிவிக்காது. ஆகவே, அதை மீண்டும் வற்புறுத்த நம் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தப் போக்கு வரத்து விமானத் தளம் அமைக்க பல தடவைகள், 1967, 68. 70 ம் ஆண்டுகளில் பல தடவைகள் வற்புறுத்தி வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறும் கருத்தையும் மனத்தில் கொண்டு இன்னமும் வற்புறுத்தப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, are the Government aware of the fact that air traffic is falling down and the estimated loss for 1972 as forecast by the Indian Airlines Corporation, is about Rs. 22 crores?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய விவரம் என்னிடத்தில் கிடையாது.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, ஏற்கனவே போர்க் காலத்தில் தமிழ் நாட்டில் கட்டப்பட்ட எந்த எந்த விமானத் தளங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன? அப்படிப்பட்ட விமானத்தளங்களையாவது பயன்படுத்த மத்திய சர்க்காரை நம் சர்க்கார் அணுகி வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எத்தனை விமானத் தளங்கள் என்பதுபற்றிய விவரம் இல்லை. குறிப்பிட்ட அளவுக்கு பயணிகள் இருந்தால்தான் தளத்தை அமைக்க முடியும் என்று சொல்கிறார்கள். தூத்துக்குடியைப் பொறுத்த வரையில் அப்படிச் சொன்னார்கள். ஆனால், பயணிகள் பற்றி மினிமம் காரண்டி நம்முடைய அரசு தெரிவித்திருக்கிறது இருந்தும் அனுமதி கிடைக்கவில்லை. ஏற்கனவே கட்டிய விமானத் தளங்கள் எத்தனை என்று விவரம் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. இரா. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, தற்சமயம் தூத்துக்குடிப் பகுதியில், தூத்துக்குடியிலிருந்து 15 மைல் தூரத்தில் அமைக்க இருக்கிறது இந்த விமானத் தளம். ஆனால் தூத்துக்குடித் துறைமுகத்திற்குத் தென்புறத்தில் நிலம் நிறைய இருக்கிறது. அந்த இடத்தில் மாற்றி அமைக்க சர்க்கார் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அங்கே விமானத்தளம் அமைப்பது தூத்துக்குடிக்குச் செல்வதற்கு வசதியாகவும், திருநெல்வேலிக்குச் செல்ல வசதியாகவும் இடைப்பட்ட ஒரு இடத்தில் இருக்கின்ற வாகைகுளம் என்ற இடத்தில் விமானத் தளத்தை அமைக்க முடிவு கட்டி, மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் வற்புறுத்தி எழுதியிருக்கிறது. அவர்கள் இணக்கம் தெரிவிக்காமல் இருக்கிறார்கள். மேலும் மத்திய சர்க்காருக்கு மாநில அரசு எழுதி வற்புறுத்தும்.

Colachel Port

* 208—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Co-operation be pleased to state the steps taken by the Government to improve the Colachel Port ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : குளச்சல் துறைமுகத்திற்கு கடற்கரைச்சாலை ஒன்று அமைக்க ரூபாய் 53,000-ல் மதிப்பீடு ஒன்றை அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இந்தத் துறைமுக அபிவிருத்திக்கான கமிட்டி, குளச்சல் துறைமுகத்தைப் பார்வையிட்டார்களா? அவர்கள் ஏதாவது அறிக்கை சமர்ப்பித்தார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஒரு கமிட்டி இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, குளச்சல் பகுதியில், மணவாளக்குறிச்சியிலிருந்து மத்திய சர்க்காரால் மணல் கம்பெனி ஒன்று நடத்தப்பட்டு, ஜப்பான் போன்ற வெளிநாடுகளுக்கு அந்த மணல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால் பொருள்களை அங்கிருந்து தூத்துக்குடிக்குக் கொண்டுபோய் அனுப்ப வேண்டியதாக இருப்பதால் பல சிரமங்கள் இருக்கின்றன. மணவாளக்குறிச்சியிலே ரூ. 20 கோடி செலவில் பெரிய கம்பெனி அமைத்து செயல்பட இருக்கிறார்கள். ஆகவே. குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த 'இலுமனைட்' என்ற மணலை ஏற்றுமதி செய்ய வாய்ப்பு வசதியாக அமைக்கப்பட்டிருக்கிறது.